## முதன்மை மாவட்ட நீதிமன்றம், சிவகங்கை.

## OS.No - 150/2022

Date: 12.08.2025 PW. 2 ( சிவசாமி )

**பிரதிவாதி தரப்பு குறுக்குவிசாரணை:**

வாதி மாரிமுத்து என்பவரை எனக்கு எத்தனை வருடங்களாக தெரியும் என்றால் சுமார் 10 வருடங்களாக தெரியும். பிரதிவாதியை எனக்கு எத்தனை வருடங்களாக தெரியும் என்றால் சுமார் 10 வருடங்களாக தெரியும். 03.05.2016 அன்று எத்தனை மணிக்கு நான் சார்பதிவளார் அலுவலகத்திற்கு சென்றேன் என்றால் சுமார் 11.00 மணிக்கு சென்றேன். மேற்படி சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சென்ற பின்பு வாதியும் பிரதிவாதியும் ஈடுகடன் சம்மந்தமாக என்ன பேசிக்கொண்டார்கள் என்றால் வாதி மாரிமுத்து காலை 8.00, 9.00 மணியளவில் பிரதிவாதி நாகராஜ் என்பவரிடம் ரூ.6,00,000/- பணம் கொடுத்ததாக பேசிக்கொண்டார்கள். வாதி மாரிமுத்து என்பவர் பிரதிவாதி நாகராஜ் என்பவரிடம் பணம் கொடுத்தது சம்மந்தமாக எனக்கு நேரடியாக தெரியாது. 03.05.2016ம் தேதியன்று வாதி மாரிமுத்து எங்கே குடியிருந்தார் என்றால் பிரதிவாதி நாகராஜ் வீட்டில் குடியிருந்தார். அவ்வாறு குடியிருந்த சமயத்தில் வாதிக்கும் நாகராஜ் மனைவிக்கும் பிரச்சனை இருந்தது சம்மந்தமாக எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. பிரதிவாதி நாகராஜ் என்பவரின் மனைவிக்கு நகைகளை திருப்பி கொடுக்க வேண்டும் என்பதற்காக வாதி பிரதிவாதிக்கு கடன் கொடுப்பதாக கூறி ஈடுகடன் பத்திரம் கேட்டு பணம் கொடுக்காமலேயே ஈடுகடன் பத்திரம் பதிவு செய்யப்பட்டுவிட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஈடுகடன் பத்திரம் பதிவு செய்வதற்கு பிரதிவாதி நாகராஜ் என்னை அழைத்து செல்லவில்லை என்றும் வாதி மாரிமுத்து தான் அழைத்துசென்றார் என்றும் அதனால் வாதிக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி பத்திரப்பதிவிற்கு முன்பே வாதி, பிரதிவாதிக்கு இடையில் சண்டை வந்து அது சம்மந்தமாக காவல்நிலையம் சென்று புகார் கொடுத்துக்கொண்டார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.வாதி எந்த காலத்திலும் பிரதிவாதிக்கு பணம் கொடுக்கவில்லை என்றும் வாதி பிரதிவாதியிடம் பணம் கொடுத்ததாக என்னிடம் சொன்னதாகவும் அதன் பின்பு ஈடுகடன் பத்திரம் பதிவு செய்யப்பட்டதாகவும் நான் பொய்யாக சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் நான் சாட்சி சொல்வதற்காக

அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. வாதி அழைத்ததன் பேரில் தான் நான் இங்கு வந்து சாட்சி சொல்கிறேன் என்றால் சரிதான். அதனால் நான் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:** இல்லை.

சாட்சி சொல்லியபடி என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, திறந்த நீதிமன்றத்தில் சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு, கையொப்பமிடப்பட்டுள்ளது.

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2025.08.13 09:55:07 +0530

**முதன்மை மாவட்ட நீதிபதி,**
**சிவகங்கை.**